மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

புதிய தொழிற்சாலைகள்

***9807—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது டிட்கோ மற்றும் சிப்காட் வசம் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில்முனைவோர்கள் திருநெல்வேலி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கான செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களுடன் முன்வந்தால், டிட்கோ அவர்களுடன் இணைந்து, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நெல்லை தொகுதிக்குட்பட்ட மானூர் ஒன்றியப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இங்கு விவசாயம்தான் பிரதான தொழிலாக உள்ளது. கடந்த ஐந்து, ஆறு ஆண்டுக் காலமாக, மழை அதிகம் பெய்யாத காரணத்தாலும், சிற்றாருக்குக் குறுக்கே அணைகள் கட்டப்பட்டதாலும், குளத்திற்கு தண்ணீர் வருவது*

2018 மார்ச் 20]

குறைந்துவிட்டது. எனவே, இந்தப் பகுதியில் வேலையில்லாததால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அரசு சென்னையை சுற்றியே தொழிற்சாலைகளை அமைக்காமல், இதுபோன்ற இடங்களுக்குப் புதிய தொழிற்சாலைகளை அமைத்துத் தந்து, மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பகுதியில் உள்ள ஒன்பது மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அந்த அடிப்படையிலே திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், கங்கைகொண்டான், பிராஞ்சேரி மற்றும் சித்தர் சத்திரம் கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 1,697 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் தொழிற்பூங்கா ஒன்றை அமைக்க நிருவாக அனுமதி கோரும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசிலனையில் உள்ளது. நிருவாக அனுமதிக்கான அரசாணை வெளியிடப்பட்டவுடன், சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கான நில எடுப்பு நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த நேரத்திலே தென் தமிழ்நாடு, குறிப்பாக நெல்லைப் பகுதியில் தொழில் தொடங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல்லை மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் பகுதியில், கடந்த தலைவர் ஆட்சிக் காலத்தில்* I.T. Park *ஒன்று திறக்கப்பட்டு, அது இன்னும் செயல்படாமல் இருக்கிறது. மேலும், இந்தப் பகுதியில் அயல்நாட்டு நிறுவனமான* Syntel Company *தேவையான கட்டடங்களையெல்லாம் கட்டி திறக்கப்படக்கூடிய சூழ்நிலையில் பாதியில் நிறுத்திவிட்டு*

சென்றுவிட்டது. இதையெல்லாம் கருத்தில்கொண்டு, இந்த அரசு இந்தப் பகுதியில் வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கு வரக்கூடிய கம்பெனிகளுக்கு ஊக்கம் அளித்து, அதிக அளவு வாய்ப்புகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வருடத்திற்குப் பிறகுதான் எனக்கு இங்கே பேச வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. கடந்த முறையும் இந்த Syntel Company பற்றி கூறினேன். அந்தக் கம்பெனி உடனே திறக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால், இதுவரை அந்தக் கம்பெனியைத் திறக்க எந்தவித நடவடிக்கையும் இல்லையென்ற காரணத்தினால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கூறிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Syntel Company ஒரு I.T. Company. Multi National Company ஆகும். அந்தக் கம்பெனிக்குத் தேவையான அனுமதிகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன. கம்பெனியைத் திறப்பதற்குண்டான நடவடிக்கைகளை உடனடியாக அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை–கன்னியாகுமரி தொழில்வழி மேம்பாட்டுச் சாலை ஒன்று அமையப்படவுள்ளது. மத்திய அரசு நிறுவனம் மற்றும் டிட்கோ நிறுவனத்தின் joint venture–ல் இது அமையவுள்ளது. சென்னை–கன்னியாகுமரி தொழில்வழி மேம்பாட்டுச் சாலைத் திட்டம் வந்தால் கங்கைகொண்டான், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் தொழில் வளர்வதற்குண்டான வழிவகைகளை இந்த அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையில் 9,030 ஏக்கர் நிலத்தை சிப்காட் கையகப்படுத்த வேண்டும், GIM 2019–ஐப் பொறுத்து, தொழில் நிறுவனங்களுக்குண்டான நிலத்திற்கு Land Bank create செய்ய வேண்டுமென்ற ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள். ஏற்கெனவே தூத்துக்குடி–மதுரை Industrial Corridor Road இருக்கின்றது. இதனையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது தென்மண்டலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையில் திருநெல்வேலி பகுதியிலும் தொழில் வளம் பெருகுவதற்குண்டான வாய்ப்பை

2018 மார்ச் 20]

இந்த அரசு மேற்கொள்ளும். நிச்சயமாக GIM 2019 அடிப்படையில், எந்தத் தொழிற்சாலை வந்தாலும் அதனை அங்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தென் மண்டலத்தைப் பொறுத்தவரையில் நாம் நிலத்திற்கு 50 சதவிகித மானியம் கொடுக்கின்றோம். முத்திரைத்தாளுக்கு முழுவதுமாக 100 சதவிகித கட்டணச் சலுகை கொடுக்கின்றோம். அவர்களுக்குண்டான VAT refund கொடுக்கிறோம். முதலீட்டு மானியம்கூட 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரித்துக் கொடுக்கின்றோம். மேலும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்திக் கொடுக்கின்றோம். தற்போது GST வரி வந்துள்ளது. நடைமுறையிலுள்ள குறைந்தபட்ச முதலீட்டுத் தொகையான ரூ.50 கோடி என்பது தற்போது 10 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, தென்மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தித் தர வேண்டும், அங்கே இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற ஓர் உயர்ந்த நோக்கோடு செயல்படுகின்ற அரசு இந்த அரசு. GIM 2019 அடிப்படையில், நிச்சயமாக திருநெல்வேலி பகுதியில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்குண்டான வழிவகைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல்செங்கத்தில் 12 ஆயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயப் பண்ணை இருக்கின்றது. அங்கே commercial purpose ஆக வியாபார நோக்கில் நீலகிரி மரங்கள் நடப்பட்டுள்ளன. இதனால் பெரும் அளவு நிலத்தடி நீர் பாதிக்கப்படுகின்றது. எனவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு தொழிற்பேட்டையை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, பெரியகோளபாடி மற்றும் கட்டமடுவு ஆகிய

இரண்டு இடங்களில் சிப்காட் வளாகங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்க வேண்டுமென்று அன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 29–6–2017 அன்று இப்பேரவையில் விதி எண் 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பெரியகோளபாடி கிராமத்தில் 57.18 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்க சிட்கோ நிறுவனத்திற்கு நிலத்திற்கான முன்நுழைவு அனுமதி 21–6–2017 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டதன் அடிப்படையில், தொழிற்பேட்டைக்கான வரைபடம் தயாரிக்கும் பணியை சிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கால்நடைக் கிளை நிலையம்

***6211—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மேட்டுதிருக்காம்புலியூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?